நூலகம்
04-12-1992


# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118
இதழ்: 26

04 – 12 – 1992

விலை ரூபா 3-50


## டிசம்பர் 7-13 யாழ் மறைவட்டத்தில் வேதாகம வாரம்

டிசம்பர் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை யாழ் மறை வட்டப் பங்குகளில் வேதாகம வாரம் சிறப்பாகக் கொண்டாட வேண்டப்படுகின்றது. இதற்கு உதவியாக வேதாகம வழிபாடுகள், வேதாகம புத்தகங்கள் (மலிவு விற்பனையில்) வேதாகம குறுக்கெழுத்துப் போட்டிகள், இவ்வாரத்தைச் சிறப்பிக்கக்கூடிய சிற்றேடுகள் மறைக்கல்வி நிலையத்தில் தயார் நிலையில் இருக்கின்றது.

பங்குத் தந்தையர்கள், ஆசிரியர்கள், பொதுநிலையினர், ஆர்வமுள்ளவர்கள் நடுநிலையத்தோடு தொடர்புகொண்டு இவற்றைப் பெற்று, போட்டியில் பங்குகொண்டு இவ்வாரத்தைச் சிறப்பிக்கலாம். சிறப்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

# சுயநலம் ஒழிக்க, பகைமை போக்க, தீய எண்ணம் அகற்ற
# தேவநற்கருணை நல்வழிகாட்டி

**“தற்போது நடைபெறும் போரினால் இடம் பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டவர்களை நேரில் கண்டு ஆறுதல் அளிப்பதே எனது வருகையின் நோக்கம்” என்றார் யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள்.**

யாழ். மறைவட்டத்தின் ஆயராகப் பொறுப்பேற்றபின் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மானிப்பாய் மறைவட்டத்தை தரிசித்து தமது மேய்ப்புப்பணியை தொடக்கினார். மறைப்பேராசிரியரும் மக்களோடு இரண்டறக்கலந்து பணியாற்றுபவருமான ஆயரவர்கள், திருமறைப் பேராசிரியரும், விசுவாசப்பரப்புதலில் அயராதுழைத்தவருமான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் மானிப்பாய்ப் பதியைத் தேர்ந்தெடுத்ததில் ஆச்சரியமில்லை. பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், பத்தாவத்தைப் பகுதிகளிலிருந்து, அண்மைக் காலத்தாக்குதல்களால் இடம் பெயர்ந்து பெருமளவில் மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலைப்பகுதிகளில் அடைக்கலம்புகுந்திருக்கும் மக்களைத்தரிசிப்பதும் ஆண்டகையின் தலையாய நோக்கமாயிருந்தது.

21–11–92 சனிக்கிழமை காலை ஆயரவர்கள் மானிப்பாய்க்கு வந்துசேர்ந்தபோது மானிப்பாய் மறைவட்டார முதல்வர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகள் தலைமையில் குருக்களும் பெருந்திரளான மக்களும் அவரை வரவேற்று புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மானிப்பாய் மறைவட்டார பங்குகளின் பிரதிநிதிகளாலும், இடம்பெயர்ந்து வந்த பங்குகளின் பிரதிநிதிகளாலும் ஆண்டகையவர்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டார்.

மறையாசிரியர் திரு. பங்கிராஸ் தமது வரவேற்புரையில், ‘‘அண்மைக்கால தாக்குதல்களால் பரம்பரையாக நாம் வசித்துவந்தஉணர்வுகளையும், உறைவிடங்களையும், உடைமைகளையும் இழந்து உடல், உளத்தாக்கங்களோடு மானிப்பாய் மறைவட்டாரத்தில் தஞ்சம் புகுந்துள்ளோம். எமது நிலைப்பாடு என்னவாகுமோ என்று ஏங்கித்தவிக்கும் எம்மைத்தேடி எமது ஆயர் வந்திருப்பது எமக்கு ஆறுதலளிக்கிறது,’’ எனக்கூறினார்.

‘‘அகதிகளை நேரில்கண்டு ஆறுதலளிப்பதே எனது வருகையின் நோக்கமாகும்’’ என

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## சமுதாயத்தின் இதயம் மதம்

ஒரு சமுதாயத் தனித்துவத்தின் முக்கிய மூல ஆதாரமாக அதன் இதயமாக இருப்பது மதம் என்று கூறினார் இங்கிலாந்து கருதினால் ஜோர்ஜ் கியூம். தனியுரிமைக்கோட்பாட்டுக் காலமாகிய இக்காலத்தில் பொது வாழ்வில் கிறிஸ்தவ மதிப்பீடுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டதுபோல்தோன்றினாலும் கடந்த 200 ஆண்டுகளில் இம்மதிப்பீடுகள் சமூகத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றன என்று சமூகமும் மதமும்என்ற தலைப்பில் ஆக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார் கருதினால் கியூம். வரலாற்றில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சமயம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளை கண்நோக்க வேண்டும் என்று கூறிய கருதினால் சமயம் முற்றிலும் தனியார் சம்பந்தப்பட்டது என்ற கருத்திற்கு மறுப்புத் தெரிவித்தார்.

## நீதி இருக்குமிடத்தில் அமைதி ஆறுபோல் பெருக்கெடுக்கும்

1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உகண்டா நாட்டில் இடம்பெற இருக்கும் திருத்தந்தையின் மேய்ப்புப்பணித் திருப்பயணத்திற்கு விசுவாசிகளைத் தயாரிக்கும் விதத்தில் அந்நாட்டுக் கத்தோலிக்க ஆயர்கள் மீட்புப்பணிச் சுற்றறிக்கையை விடுத்துள்ளனர். திருத்தந்தையின் 6ஆம் சின்னப்பரின் அந்நாட்டிற்கான திருப்பயணத்திற்குப்பின் கத்தோலிக்கத் திருச்சபை பற்றி மகிழ்ச்சி தெரிவித்துள்ள ஆயர்கள் உகண்டாவின் உள்நாட்டுப் போரின் போது கிறிஸ்தவர்கள் காட்டிய விசுவாசத்திற்கான சான்று வாழ்வையும் பாராட்டியுள்ளனர்.

நீதி இருக்குமிடத்தில் அமைதி ஆறுபோல் பெருக்கெடுக்கும் என்பதைக் குறிப்பிட்டு போர், லஞ்ச ஊழல், அதிகாரத் துர்ப்பிரயோகம் போன்றவற்றால் அநீதி நிறுவனமாக்கப்பட்ட ஒரு சூழலில் தலத் திருச்சபை நீதிக்காக உழைக்க வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளனர் ஆயர்கள். இன்னும் அனைவரும் குறிப்பாக இளைஞர்கள் நற்செய்தி அறிவிப்பாளர்களாகச் செயற்படவும் ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## ஒன்றிணைந்த தீர்வு காணவேண்டும்

தென்னாபிரிக்காவில் மோதல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதைக் கண்டிப்பதாகவும் அமைதிக்கும் சகிப்புத் தன்மைக்கும் அழைப்பு விடுப்பதாகவும் தென்மண்டல ஆபிரிக்க ஆயர்கள் பேரவை வெள்ளியன்று வெளியிட்ட அறிக்கையில் உரைக்கின்றது.

அரசியல் தலைவர்கள் தங்கள் சுயநலப் பார்வையையும் கட்சி நலன்களையும் தாண்டி தென்னாபிரிக்காவை அச்சுறுத்தும் நடவடிக்கைகளையும், தொடர் மரணங்களையும் நிறுத்துவதற்கு ஒன்றிணைந்த தீர்வைக் காணவேண்டுமென ஆயர்கள் தங்கள் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இரத்தம் சிந்துவதை உடன் நிறுத்த அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய பாதுகாப்புத் துருப்புக்கள் உருவாக வேண்டுமென வலியுறுத்தும் ஆயர்கள் தேர்தலை மேலும் தள்ளிப் போடுவது தென் ஆபிரிக்க மக்களின் அமைதி மற்றும் நிலையான உரிமைகளை மறுப்பதாகும் என மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தென் ஆபிரிக்காவில் அமைதி மற்றும் சகிப்புத் தன்மைக்கென கோவில்களில் சிறப்பு ஜெபங்களை ஊக்குவிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தென் மண்டல ஆபிரிக்க ஆயர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

யாழ் மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில்

## சமூக நலனை வென்றெடுக்க பெற்றோர் வழிகாட்டி
— யாழ் அரச அதிபர்

## எமக்கென்றொரு கல்வித் திட்டம் தேவை
— கல்லூரி அதிபர்

‘‘பெற்றோர் தம்பிள்ளைகளை சுபீட்சத்திற்கான முறையில் வழிப்படுத்தி முன்னேற்ற வேண்டும். அப்படியென்றால் தான் சமூக நலனைப் பூரணமாக வென்றெடுக்க முடியும்’’ என்று கடந்த ஞாயிறு 29–11–1992 அன்று யாழ். மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். அரசாங்க அதிபர் திருவாளர் க. மாணிக்கவாசகர் அவர்கள் கூறினார். இப்பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். ‘மாணவரைப் பொறுத்தவரையில் அவர்கள் இதுவரை தெரிந்தோ தெரியாமலோ தழுவிவந்த பிறகலை, பண்பாடுகளிலிருந்து விடுவிப்படைந்து, புதிய தேசிய மறு மலர்ச்சி என்னும் பிரவாகத்தில் தங்களை இனம் கண்டு மனங்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் அவர்களுடைய உடல் உளவியற் கோட்பாடுகளில் புதிய எண்ணக் கருக்கள் வண்ணமுறப் பதிந்துள்ளன,’ என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது.

‘‘பாடசாலைப் புறகருமங்கள் எவற்றிலுமே பங்குகொள்ளநேரமில்லாது புத்தகப் பூச்சிகளாகமட்டும் மாறியிருக்கும்இவர்கள், சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, தலைமை தாங்கும் இயல்பு, பிறர் நன்மையிற் கரிசனை என்ற விழுமியங்களைப் பெறாததனால் சமூகப் பிரச்சனைகளை எதிர் கொள்ள முடியாமல் பாலியல் குற்றவாளிகளாகவும் மாறுகின்றனர். ‘‘வளர்த்த கடா மார்பில் பாய்வது போல,’’ பெற்றோர் மீதும், ஆசிரியர் மீதும், கல்வி நிறுவனங்கள் மீதும் இவர்கள் ஓர் நீள் பாய்ச்சலைத் தொடுக்கின்றனர். அவர்களே தலைமை தாங்கிக் காரியங்களை நடத்த முற்படுகின்றனர். தாம் நினைக்கும் மாற்றங்களை அவாவுகின்றனர். இப்படி அவாவும் நாமும் மாற்றுத் திட்டங்களைத்தீட்ட முடியாத கையாலாகாதவர்களாக இருக்கின்றோம்.

எதிர் காலத்தில் எம் மாணவர்களை எமது சூழல்களுக்கும், சமூகத் தேவைகளுக்கும் ஏற்ப வனைந்து எடுப்பதற்கு எமக்கென்றொரு கல்வித்திட்டமிடல் தேவை என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.’’


13-12-1992

குருத்துவ வெள்ளி விழா

பேரருள்திரு
இராயப்பு யோசவ்
மன்னார் ஆயர்

குருவாக திருநிலைப்படுத்தல்
13–12–1967



அன்பும் அறிவும் அமலன் அருளும்
நன்மன ஊக்கமும் நவிலும் இன் சொல்லும்
உள்ளத் தாழ்ச்சியும் உடைய பொன்மனத்தோன்
வெள்ளத் தனைய பெருவரம் பெற்றோன்
வெண்பொன் யூபிலி காணும் இவ்வேளை
எம்பிரான் ஆசி பொழிய வாழ்த்துக்கள்!

## எம்கருத்து

# அன்பின் அழைப்பு

புதிய ஆயர்களின் வாக்குறுதிகளை அறிந்து மனம் இளகாதவரிலர். இடம் பெயர்ந்து பெரும் இன்னல்களை அனுபவிக்கும் அகதிகளின் துயர் துடைக்கும் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, தங்களை முழுமையாக அர்ப்பணிக்கின்றனர் நம் ஆயர்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில், ஒவ்வொரு மதபக்தன் மாத்திரமல்ல, ஒவ்வொரு தேசாபிமானியும் ஆயர்களின் இம் மனநிலையை தனதாக்கிக்கொள்வது அவசியமாகின்றது.

இரக்கமுள்ளவர்கள் என்றென்றும் பாராட்டப்படுகிறார்கள். தனக்கு உதவியவர்களுக்கு உதவுகின்றவர்கள் சாதாரண மனிதர்கள். தனக்கு உதவியவர்களுக்கு உபத்திரவம் செய்கிறவர்களோ கொடிய மனிதர்கள். ஆனால் தனக்கு உதவாதவர்க்கும் உதவுகிறவர்கள் உத்தம மனிதர்கள். தனக்குத் தொல்லை தந்தவர்க்கும் உதவுகின்றவர்கள் போற்றுதற்குரியவர்கள்.

பிறர் அனுபவிக்கின்ற துன்பத்தை தான் அனுபவிப்பதாக உணர்ந்து ஓடோடிச் சென்று உதவும் உயர் பண்பினைப்பெற அசாதாரண மனப்பக்குவம் தேவை.

எல்லோரும் இறைவனின் மக்கள் என்று கருதுபவர்கள் மற்றவர்களைத் தமது சகோதரராகக் கருதுவார்கள். சகோதரன் பசித்திருக்க தாம் உண்ண அவர்களுக்கு மனம் வராது. சாதாரண உயிரினங்கள் கூட துன்புறுவதை அவர்களால் சகிக்க இயலாது. வாடும் பயிரைக்கண்டு வாடும் அருள் உள்ளம் படைத்தவர்கள் அவர்கள். இவ்வாறான உள்ளம் உடையவர்கள்தான் இன்றைய சமுதாயத்தின் இன்றியமையாத தேவையாகின்றனர்.

நம் மக்கள் இன்றளவும் அழியாமல் இருப்பதற்கு காரணம் அடுத்தவர்கள் துயர் கண்டு உதவும் அருளாளர்களும், ஏனையோர் இடரினைப் புரிந்து தம்மை அர்ப்பணிக்கும் தியாகிகளுமே ஆவார்கள். எளியவர்கள், யாருமற்ற அனாதைகள், நோயுற்றோர், உடல் ஊனமுற்றவர்கள், திக்கற்ற விதவைகள், யாருமறியாத அகதிகள் இவர்களுக்கு இரங்கி உதவுகின்றவர்கள் இறைவன் சன்னிதியில் போற்றப்படுவார்கள்.

எளியவர்களின் உழைப்பை உறிஞ்சுபவர்கள், அனாதைகளின் வேதனத்தை விரயமாக்குபவர்கள், நோயுற்றோரின் வேதனைக்குப் பாராமுகம் காட்டுபவர்கள், உடல் ஊனமுற்றோரை ஏளனம் செய்பவர்கள், விதவைகளின் சொத்தை அபகரிப்பவர்கள், அகதிகளாக அடைக்கலம் புகுந்தவர்களை ஆபத்துவேளையில் கைவிடுபவர்கள், நம்பியவர்களை மோசம் செய்பவர்கள் முதலானோர் மக்கள் முன்னிலையில் தூற்றப்படுவார்கள்; தம் உள்ளத்தில் நிம்மதி இழப்பார்கள்; இறைவனின் தீர்ப்பில் சபிக்கப்பட்டவர்களாவார்!

எல்லோரும் அயலாரை அன்புசெய்து, அவர்களுக்கு உதவிபுரிய அழைக்கப்படுகின்றனர். அன்புசெய்வது மனிதனுக்கு இன்பம் தரும் செயலாகும். ஆனால் தமக்குத் துன்பம் தந்தவர்களுக்கும் உதவுவது என்பது மிகவும் கடினமான செயல். அடித்தவன் கைக்கு முத்தமிடுவது எளிதல்ல. முதலில் அவர் தந்த துன்பத்தை மன்னிக்க வேண்டும்; அதன்பின் மறக்க வேண்டும்; அதன்பிறகு அவர்கள்மீது அன்பு கொண்டு இரங்கி அவர்களுக்கு உதவவேண்டும். இது எல்லோராலும் ஆகும் காரியமல்ல! ஆனால் இதுவே அன்பின் சிகரம்.

**“சிறு மந்தையே, அஞ்சாதே; ஏனெனில், உங்கள் தந்தை தம் அரசை உங்களுக்குக் கொடுக்கத் திருவுளம் கொண்டார்.”**

**(லூக். 12 : 32)**

# புரியாத புதிர்களா?

(2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் இறைவெளிப்பாடு பற்றிய கொள்கைத் திரட்டு)

அதிகாரம் 2 (தொடர்ச்சி)

## மரபுக்கும் திருமறை நூலுக்கும் உள்ள தொடர்பு

அடுத்த இதழில் அதிகாரம் 3

9. ஆகவே திருமரபும் திருமறை நூலும் தம்மிடையே நெருங்கிய பிணைப்பும் உறவும் கொண்டிருக்கின்றன. ஏனெனில் அவையிரண்டும் ஒரே இறையூற்றிலிருந்து வெளிப்பட்டு, ஒருவகையில் ஒன்றாய் இணைந்து, ஒரே குறிக்கோளை நாடிச் செல்லுகின்றன. ஏனெனில் திருமறை நூல் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டபடியால் அது இறைவனின் வாய்மொழியாயிருக்கின்றது. திருமரபோவெனில் ஆண்டவர் கிறிஸ்துவும் தூய ஆவியும் அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்த இறை வார்த்தையை அவர்களின் வழித்தோன்றல்களுக்கு முழுமையுடன் அளிக்கின்றது. உண்மையின் ஆவியானவரின் ஒளியில் இவ்வழித்தோன்றல்கள் இறைவார்த்தையைப் பற்றுறுதியுடன் காக்கவும், விளக்கவும், பரப்பவும் வேண்டுமென்பதே இதன் நோக்கம். இவ்வாறாக வெளிப்படுத்தப்பட்ட எல்லாவற்றையும் பற்றிய உறுதியைத் திருச்சபை திருமறை நூல்களிலிருந்து மட்டுமே பெறுவதில்லை. ஆகவே, திருமரபையும் திருநூல்களையும் சமமான பக்திப் பற்றுதலுடனும் மரியாதையுடனும் ஏற்று வணக்கமளிக்க வேண்டும்.

### மரபும் திருமறை நூலும் திருச்சபையின் ஆசிரியத்தோடு கொண்டுள்ள தொடர்பு

10. திருமரபும் திருமறை நூலும் திருச்சபையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள இறை வார்த்தையின் ஒரே திருக்களஞ்சியமாகும். இத்திருக்களஞ்சியத்தைப் பற்றிக் கொண்டு புனித மக்களனைவரும் தம் மேய்ப்பர்களோடு இணைந்து அப்போஸ்தலர்களின் போதனையிலும், நட்புறவிலும், அப்பத்தைப் பிட்குதலிலும் தொடர்ந்து நிலை நிற்கின்றனர் (காண் அப். 2:42 கிரேக்க மூலம்). இவ்வாறு, வழிவழிவந்த விசுவாசத்தைக் காப்பதிலும் செயல்படுத்துவதிலும் அறிக்கையிடுவதிலும் ஆயர்களுக்கும் விசுவாசிகளுக்குமிடையே சிறந்த ஒற்றுமை நிலவுகிறது.

எழுதப்பட்ட அல்லது மரபுவழிவந்த இறைவனின் வார்த்தைக்கு அதிகாரபூர்வமான பொருள் விளக்கம் செய்யும் பொறுப்பு இயேசுகிறிஸ்துவின் பெயரால் அதிகாரம் செலுத்தும் திருச்சபையின் உயிருள்ள ஆசிரியத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், இவ்வாசிரியம் இறைவனின் வார்த்தைக்கு மேற்பட்டதல்ல. மாறாக, மரபுவழியில் வழங்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

### ● திருத்தந்தை பேசுகிறார்:

## அன்பு மிகு இளைஞர்களே!

...வெறுப்பு, வன்முறை, ஏமாற்றம் ஆகியவற்றால் ஒருபோதும் நிறைவை அடைய முடியாது. உள்ளத்தன்போடு கிறிஸ்துவைத் தேடினால் மட்டும் சாந்தி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை நீங்கள் கண்டடைய முடியும்...

...ஆனால் கிறிஸ்துவை நீங்கள் ஒரு முறை கண்டு கொண்டுவிட்டால், அவர் யார் என்று தெரிந்து கொண்டுவிட்டால் அவரை அறிவிக்கத் துடிப்பீர்கள் என்பது உண்மை. எனவே கிறிஸ்துவின் உண்மைச் சாட்சிகளாக இருங்கள், உங்கள் சிந்தனை, சொல், செயல், வாழ்வில் அவரைப் பறைசாற்றுங்கள்...

...செபத்திலும் நம்பிக்கையிலும் உரம்பெற்று, இன்றைய உலகுக்கு கிறிஸ்துவை நீங்கள் தான் கொண்டு செல்ல வேண்டும். உங்கள் பள்ளிகளிலும் உங்களைச் சுற்றியுள்ள இளைஞர் உலகத்திலும் இத்தகைய நல்ல பணியைச் செய்ய கவனமும் கரிசனையும் கொண்டிருங்கள்.

# வேதாகம வாரம்

## யாழ் மறைவட்ட மறைக்கல்வி இயக்குனரின் செய்தி

## ஆளுக்கொரு விவிலியம் நாளுக்கொரு அத்தியாயம்



இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சி காரணமாக இன்று வேதாகமத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, சிறப்பாகப் பொது நிலையினரும் கற்கவேண்டுமென வலியுறுத்தி நிற்கின்றது. திருச்சபையின் திருவழிபாடுகளிலும் முக்கிய காலங்களிலும் வேதாகமம் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது.

“வேதாகமத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்” என்ற புனித ஜெறோமின் அறிவுரைக்கேற்ப, நாம் எல்லோரும் வேதாகமத்தைப் படிக்க, அறிய ஆவல் கொள்ள வேண்டும்; தூண்டப்பட வேண்டும். ‘வீட்டுக்கொரு விவிலியம்’ என்ற நிலைமாறி, ஆளுக்கொரு விவிலியம், நாளுக்கொரு அத்தியாயம் என்ற நிலை உருவாக வேண்டும்.

நாம் ஏன் வேதாகமத்தை அறியவேண்டும், படிக்கவேண்டும் என்ற வினாவை எழுப்புவோமானால், வேதாகமத்தின் மையம் இறைவன். இதன் வழியாக இறைவன் தம் வெளிப்பாடுகளைத் தந்து, வரலாற்றில் நிலையான ஈடுபாடு கொண்டு நம்மை அன்பு செய்வதை அறிவிக்கின்றார். இது நம்மிடையேயுள்ள ஆயிரக்கணக்கான நூல்களிலும் வேறுபட்டது, ஏனெனில் வேதாகமம் இறை ஏவுதலால், மனிதரால் எழுதப்பட்டது. அத்துடன் “கடவுளின் வார்த்தை உயிருள்ளது. ஆற்றல்மிக்கது, இருபக்கமும் கருக்குவாய்ந்த எந்த வாளிலும் கூர்மையானது,” நம் எல்லா எண்ணங்களையும் ஊடுருவுகின்றது.” (எபி. 4 : 12)

ஆகவே இறைவார்த்தை சாதாரண வார்த்தையல்ல. நம் வாழ்விற்குத் தேவையான எல்லாத் தத்துவ முத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. நம்முடன் பேசுகின்ற வார்த்தைகள் சிறப்பாக இன்றைய சூழலில் நம் மக்களின் பெருமூச்சுகள், அங்கலாய்ப்புகள், சோதனைகள், துன்பங்கள் மத்தியிலும் இறைவன் உற்சாகம், நம்பிக்கை, விசுவாச உணர்வு, அறிவொளி தந்து நாம் எவ்வாறு செயற்பட வேண்டுமென வழிநடத்தும் நம்பிக்கையின் ஒளியாகத் திகழ்கின்றது.

எனவே வேதாகம வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவோம். பங்குமட்டத்திலும், குடும்பமட்டத்திலும் கொண்டாடுவதன் வழியாக இதன் உட்பொருளை முக்கியத்துவத்தை உணர இறைவன் வழிசமைக்க வேண்டுமென ஆசிக்கின்றேன்.

அருட்திரு. R. H. சகாயநாயகம்

## 08-12-1992 : அமலோற்பவ அன்னைமரி விழா

# தூயாவி தொட்டது துலங்கும்

வாஷிங்டனில் புகழ் மிக்கதும், உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்வதும், திருயாத்திரைத்தலமுமான அமலோற்பவ அன்னையின் தேசியப் பேராலயத்தை அடுத்து அமைந்துள்ள கத்தோலிக்க சர்வகலாசாலை 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் ஏழாம் நாள் டாக்டர் J. A. ராஸ் மெக்கென்சிக்கு சர்வ கலா சாலைத் தலைவரின் "பாதுகாவலர் விருதை" அளித்து கௌர வித்தது. அச்சமயம் டாக்டர் மெக்கென்சி ஆற்றிய பேருரையின் பகுதியின் ஒரு தமிழாக்கம் பின் வருமாறு.

1854ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கைபடி கன்னி மரியாள் "இறைவனின் தனிப் பெருங்கொடையின் முதல்-முதல் வினாடிமுதல் சென்ம வினையின் கறையினால் தீண்டப்படாதவள்" கிறிஸ்துவப் பொதுமறை (Ecumenical) நோக்கில் மீட்பின் பலனைய டைய இக்கொள்கை நமது அறிவிற்கு ஆழ்ந்த விளக்கம் தருகிறது.

மரணம் மனித இனத்தின் பெருங்கவலை. அதன்கோரப் பிடியில்-நாம் எதுவும் செய்ய வியலாத-பலவீனர்கள். இருப்பினும் நம்சத்துவங்களைப் பயன்படுத்தி நமது குறைகள் நிறைந்த நிலையினின்று குறையற்ற முழுமை நிலையை அடையவேண்டி இடையறாது முயல்கிறோம். மரணத்தின் நிலையில் நின்று நமக்கு உயிர்ப்பு அளிப்பது விவிலியம் இறைவனின் அருங்கொடை அது. சென்ம வினையும், மரணமும் உலகைப் பெரிதும் வருத்துகின்றன. ஆன்மாவின் மரணம் உயிரளிக்கும் இறைவனின் தொடர்பைத் துண்டிக்கிறது.

மனித இனத்தில் ஒருத்தி மட்டுமே ஆண்டவரின் குரலை அமைவுறக்கேட்டு "இதோ! ஆண்டவருடைய அடிமை. உமது வார்த்தைப்படியே எனக்கு ஆகட்டும்" என்று கூறினாள். அந்தக் கணமே அந்த வார்த்தைகளின் மூலம் கிறிஸ்துவின் மீட்புப் பணிக்கு தன் வாழ்க்கையை கருவியாகக் கையளித்தாள். தூயாவியின் வல்லமை இத்தியாகத்திற்கு அவளை ஏற்கனவே தெரிந்தெடுத்திருந்தது. இறப்பு, உயிர்ப்பு நிகழ்ச்சிகளில் விசுவாசத்தின் மிகுதியால் மரியம்மாள் நமது மீட்பின்வழியாக அமைந்தாள். அவளது தூய்மை மாசணுகா நிலையின் மாண்புமட்டுமல்ல. மனித இனத்தின் இயல்புகளின் முழுமையான மாற்றமும் கூட (Transformation). அதுவே தூயாவி அவளுக்கீந்த இணையற்ற பரிசு. தூயாவி தொட்டது "அனைத்தும்" துலங்கும். முழுமையற்ற நிலையினின்று முழுமைநோக்கி வளரும். இது நமக்கோர் நற்செய்தி. இறைவனின் உள்ளத்தைப் போன்ற மன தரித்திர நிலையைத் தூயாவி தன் கொடைகளால் நிரப்புகிறார். பரமனின் இரகசியங்களைப் புரிந்து கொள்வதும், அதனால் பயனடைவதும் எளிய உள்ளத்தால் தான் முடியும். மரியாளின் திறந்த எளிய உள்ளம் இதற்கு சான்று.

## என்னை நானாய் வாழவிடு

ஆபிரிக்க கவிஞர் : ரோலண்ட் ரொம்பேக் டெம்ஸ்டர் (Roland Tombekai Dempster)

**ஆபிரிக்காவின் வேண்டுதல் (Africa's Plea)**

தமிழ்வடிவம் : கவிஞர் என். சண்முகலிங்கன்

உன்னைப் போல் நானில்லை
ஆனாலும்
எனக் கொரு சந்தர்ப்பம் தாராய்
என்னை 'நானாய்' இருக்கவிடாய்...

"உன்னைப்போல் நானிருந்தால்......"
ஆனால்,
உன்னைப்போல் நானில்லை.
என்பது நீயறிவாய்...

ஆனாலும் என்னை
'நானாய்' இருக்கவிடாய்...

உன்னது போல்
நானே 'நீ' போல்
என்னுடைய அலுவல்களில்
என்றுமே தலையிடுவாய்

பேச்சில், செயலில், சிந்தனையில்...
என்னை "நீ" என எதிர்பார்த்தல்,
என்றும் மடமை .. அநியாயம்!

என்னை "நானாய்" இறைவன் படைத்தனன்
அவனே உன்னையும் "நீ" என ஆக்கினன்
அவன் பேரால் வேண்டுகிறேன்
என்னை 'நானாய்' வாழவிடு.

## 03-12-1992 மறைபோதக நாடுகளின் பாதுகாவலர் விழா

புனித பிரான்சீஸ் சவேரியார் இந்து தேசத்தின் இணையற்ற அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுகின்றார். ஆனால் இளமையில் அவர் வளர்த்த இன்பக்கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் அளவே இல்லை. பட்டமும் பதவியும் பெற வேண்டும். பேரோடும் புகழோடும் வாழவேண்டும், அறிவுக்கு ஓர் ஆசிரியன் என்று அனைவரும் மனதார வாழ்த்த வேண்டும் என்றெல்லாம் ஏக்க அலைகளால் தழுவப்பட்டார்.

லோயோலா இஞ்ஞாசியார் அவரைச் சந்திக்கிறார். "ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மாவுக்குக் கேடு விளைவித்தால் அவனுக்கு வரும் பயனென்ன"? அவர் தந்த உறவு சவேரியாரின் வாழ்க்கையையே திசைதிருப்பியது. உலகம் தரும் மகிமையின் போலித் தன்மையை உணர்ந்தார். உள்ளத்தில் வளர்ந்த உலக ஆசைகள், கண்ட கனவுகள் எழுப்பிய ஏக்கங்கள் எல்லாவற்றையும் தகர்த்துத் தரைமட்டமாக்கினார். இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

## புரியாத...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதை மட்டும் போதிக்கும் திருச்சபையின் ஆசிரியம் இறைவனின் கட்டளையாலும், தூய ஆவியின் துணையாலும் அதனை பக்தியோடு கேட்டு, தூய்மையாகக் காத்து, பற்றுறுதியுடன் விளக்குவதன் வழியாக இறைவார்த்தைக்குப் பணிபுரிகின்றது; அத்தோடு, இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என விசுவசிக்கும்படி அது எடுத்துரைக்கும் எல்லாவற்றையும் விசுவாசத்தின் ஒரே திருக்களஞ்சியத்திலிருந்து பெறுகின்றது.

எனவே, திருமரபு, திருமறை நூல், திருச்சபையின் ஆசிரியம் ஆகியவை இறைவனின் ஞான மிகு திட்டத்தின்படி ஒன்றோடொன்று எவ்வளவு இணைந்து ஒன்றுபட்டு இருக்கின்றன என்றால், ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியாது என்பது தெளிவு. இவை யாவும் சேர்ந்து, ஒவ்வொன்றும் தத்தம் முறைப்படி ஒரே தூய ஆவியின் செயலினால், ஆன்மாக்களின் மீட்பிற்குப் பயனுறு வகையில் உதவுகின்றன என்பதும் தெளிவாகிறது.

## வேதாகம...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையை வேதாகம ஞாயிறாகப் பங்குத்தளங்களில் கொண்டாட கேட்டுக் கொள்ளுகின்றோம்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 6 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 19 | எம் வாழ்வின் வழி யேசு |

### வழிகாட்டி

குருநகர் கடற்கரையோரம் மரியசீலனின் சிறுவீடு உள்ளது. அங்கிருந்து மாலை 5. 45 ஆனதும் மரியசீலன் கண் தெரியாத தந்தையை கல்லூரிக்குக் கூட்டிச் செல்வது வழக்கம். பாதையின் சீர்கேட்டால், வழிகாட்டிச் செல்லும் பொழுது அவன் காட்டும் அக்கறை, பொறுமை, நிதானம் சொன்னால் புரியாது, அந்தப் பாதையால் சென்றால் தான் புரியும். பாதையின் சீர்கேடு ஒரு புறமிருக்க பாதையால் மிதிவண்டியில் செல்வோரின் அசட்டைத்தனம், பாதையால் செல்வோருக்குக் கொடுக்கும் உபத்திரவம் அதனிலும் அதிகம். 500 மீற்றர் நீளமான பாதைவழியில் செல்லும் பொழுது "சீலன், உனக்கு என்னால் எவ்வளவு தொந்தரவு? ஒரு நாளா! இருநாளா!! மூன்று வருடங்களாக," என்று கண்ணீர்மல்க, குரல்நடுங்க இழுத்தார். தந்தை. "அப்பா, சும்மா வாங்க" என்று கூறிய சீலன் தன் கடமையில் கண்ணாய் இருந்தான்.

அவ்வேளை!

ஒரு மிதிவண்டி அவனை உராசி நின்றது. "அப்பா கேட்டால் ரீச்சர் வீட்ட படம் பார்க்கப்போறன் என்று சொல்லு," என்றதும் மிதிவண்டு பறந்தது. "சீலன், இது ஆர் லெனினா? ரீச்சர் வீட்ட படமா! நிம்மதியாய் நித்திரை கொள்ள முடியாமல் அலையிற வேளையில் கண்டறியாத படம்," என்று ஆத்திரத்துடன் கூறினார். "சும்மா வாங்கப்பா," என்றான் சீலன். கல்லூரியின் வகுப்பறையெங்கும் குப்பி விளக்குகள் ஒளி வீசின.

மரியசீலன் அறையில் செபமாலை ஒலி தொடங்கியதும், மற்ற வகுப்பறையில் இருந்தவர்களில் அதிகமாக சிறுவர், சிறுமியர், தாய்மார் அங்கு வந்து கூடினர். பீரங்கிப்படகு உறுமியது. கல்லூரியில் செபஒலி அதற்கீடு கொடுக்க எதிரொலித்தது. செப முடிவில் அங்கிருந்தோர், மரியசீலன் ஆரம்பிக்க அவனைத் தொடர்ந்து.

"வாழ்வளிக்கும் வல்லவா தாழ்ந்த என் உள்ளமே,
வாழ்வின் ஒளியை ஏற்றவே எழுந்து வாருமே!
ஏனோ அந்தப் பாசமே ஏழை என்னிடமே
ஈடில்லாத பாவமே புரிந்த பாவியே!
தனிமை நின்று ஏங்கினேன் துணையாய் நீ வந்தாய்
அமைதியின்றி வாடினேன் அதுவும் நீ தந்தாய்"


என்று அவர்கள் பாடிய பாடல் கல்லூரியை நிறைத்து நின்றது. ரீச்சர் வீட்டில் படம் பார்த்தோர் விழுந்தடித்து சிதறி ஓடினர்.

அன்பு விழி

## 6ஆம் மாத நினைவஞ்சலி



செல்வி
மறினா சாந்தினி சவுந்தரறாஜ்
தோற்றம்: 21–11–1963



செல்வன்
சாள்ஸ் றொசான் சவுந்தரறாஜ்
தோற்றம்: 25–05–1969

அழிப்பு
28–05–1992

" ஆன்மாவைக் கொல்ல முடியாதவர்களாய், உடலைக் கொல்லுவோர்க்கு அஞ்சாதீர்கள். "

என்று மொழிந்தருளிய எம் தந்தையே!

இவர்கள் இருவருக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். 6 மாதம் என்ன 100 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது.

இவர்களின் பேரிழப்பால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள், சகோதரி.

திருவில் ஒழுங்கை
வல்வெட்டித்துறை.

A/50/92

# மெக்சிக்கோ நாட்டின் புதிய துதியர்

புனித இராயப்பர் பஸ்லிக்கா பேராலயத்தில் கடந்த ஞாயிறு 22.11.92 (ரோம் நேரம்) காலை 9.30 மணியளவில் நடைபெற்ற ஆடம்பரத் திருப்பலியில் மெக்சிக்கோ நாட்டின் 25 மறைசாட்சிகள், மற்றும் அருட்சகோதரி மரியாடியேசு சக்கிரமென்ராடோ ஆகியோர் முத்திப்பேறு பெற்றவர்கள் என பிரகடனப்படுத்தியுள்ளார் அருட்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்.

யேசுவின் திரு இருதயப் பிள்ளைகள் என்ற கன்னியர் சபையைத் தோற்றுவித்த மரியாடியேசு சக்கிரமென்ராடோ 1868ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் நாள் மெக்சிக்கோ நாட்டு லாதா கோனாவில் பிறந்தார். நோயாளிகளைக் பராமரிப்பதற்கென 1905ஆம் ஆண்டு இக்கன்னியர் சபையைத் தோற்றுவித்த இவர் இறக்கும் வரை யேசுவின் திருஇருதய சபையில் பணியாற்றி வந்தார். இன்றும் 1926ஆம் ஆண்டில் மெக்சிக்கோவில் தலத் திருச்சபைக்கு எதிராய் நடந்த புரட்சியில் கத்தோலிக்க விசுவாசிகளாகக் கொல்லப்பட்டவர்களில் இந்த 25 மறைசாட்சிகளும் உள்ளடங்குவர். இவர்களில் 22 பேர் மறைமாவட்டகுருக்கள் மற்றும் 3 பேர் மெக்சிக்கோவின் கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். முத்தி பேறு பெற்றவர்கள் என்று திருத்தந்தையால் இதுவரை உயர்த்தப்பட்டுள்ளவர்கள் 535 பேர். இவர்களுள் 407 பேர் மறைச்சாட்சிகள். 25 திருவழிபாட்டு நிகழ்ச்சிகளில் 264 பேரைப் புனிதர்களாக உயர்த்தியுள்ளார் திருத்தந்தை. இவர்களில் 240 பேர் மறைச்சாட்சிகள்.

# பெண்களுக்கு குருப்பட்டம் வழங்க அங்கிலிகன் கிறிஸ்தவ சபை முடிவு

பெண்களுக்கு குருப்பட்டம் வழங்க அங்கலிக்கன் கிறிஸ்தவ சபை எடுத்திருக்கும் முடிவு அக்கிறிஸ்தவ சபைக்கும் கத்தோலிக்க சபைக்கும் இடையில் இருக்கும் நெருங்கிய உறவுக்கு தடையாக இருக்கும் என்றார் திருப்பீடப் பேச்சாளர் குவாஸ்ஸி நாவோராவால். பெண்களுக்கு குருப்பட்டம் வழங்குவது பற்றிய பிரச்சனை குருத்துவம் என்ற திருவருட்சாதனத்தின் ஆழமான உண்மைத் தன்மையைத் தொடுவதாக உள்ளது என்பதை திருத்தந்தை ஏற்கனவே அங்கலிக்கன் பேராயருடனான சந்திப்பில் குறிப்பிட்டதாகவும் திருப்பீடப் பேச்சாளர் குறிப்பிட்டார். இதற்கிடையே இப்புது முடிவு குறித்து கருத்தை வெளியிட்ட இங்கிலாந்தின் பிதா பிதா கருதினால் பேர்சில் கீயூம் இதனால் தான் ஏமாற்றம் அடைந்துள்ள போதிலும் அங்கலிக்கன் கிறீஸ்தவசபையுடன் கிறிஸ்தவசபை இணைந்து பணியாற்றும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் கூறினார்.

அங்கலிக்கன் கிறிஸ்தவ சபை 1543ஆம் வருடம் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றதிலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளில் பெண் குருத்துவம் பற்றிய தீர்மானம் குறிப்பிடும் படியானது.

# ஒய்வுபெற்ற யாழ். ஆயர்



முன்னாள் யாழ். ஆயர் பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தற்பொழுது யாழ். புனிதமாட்டீனார் சிறிய குருமடத்தில் தன் ஓய்வு காலத்தைக் கழித்து வருகின்றார்.

அங்கிருந்து, தன் ஆழ்ந்த அறிவு, நுட்ப ஆய்வுத்திறன், கூரிய தொலை நோக்குச் சக்தி, மற்றும் தனி ஆற்றல்களை யாழ். திருச்சபையினதும மக்களினதும் வளர்ச்சிக்காக மேலும் அர்ப்பணித்து, தொடர்ந்தும் தன்னிகரற்ற தொண்டுபுரிய எல்லாம் வல்ல இறைவன் ஆண்டகை அவர்கட்கு உடல் நலமும் ஆன்மிக பெலமும் நல்க வேண்டுமென யாழ். மறைவட்ட மக்களுடன் இணைத்து பிரார்த்திக்கின்றோம்.

# ஆயரின் அன்பு தேடிவந்தது

நவம்பர் 21ஆம் நாள் சனிக்கிழமை, மதியம் 2 மணி. சனிக்கிழமையாதலால் மடத்தில் உள்ளோர் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். மடத்தின் முன் பக்க வாசலில்

''வீட்டுக்காரரர்'' என்ற ஒரு குரல்.

''ஓம் வருகிறோம்'' என்ற பதில்.

ஆயனின் குரல் கேட்டு ஆடு ஓடியது. தொடர்ந்து மற்ற ஆடுகளும் ஒவ்வொன்றாக வந்து சேர்ந்தன. பிறகு பேச வேண்டுமா? முன்பக்க வரவேற்பறையில் அமர்ந்து, ஆயனுடன் ஆடுகள் அன்பாக உரையாடின. ஏறக்குறைய அரை மணி நேர உரையாடலின் பின், ஆயன் ஆடுகளுக்கு ஆசி அளித்துப் பிரிந்து சென்றார்.

இது எங்கே?

பல இடங்களிலும் இருந்து இடம்பெயர்ந்து, மானிப்பாய் பங்கில் வந்து தங்கியுள்ள சிறுவர் சிறுமிகளுக்கு நவம்பர் 21ஆம் நாள் புதிய ஆயர்,

மகாமேன்மை தங்கிய

தோமஸ் சௌந்திரநாயகம் அவர்கள் புனித அந்தோனியார் ஆலயத்தில் பலிப்பூசை நிறைவேற்றி 80 பிள்ளைகளுக்கு முதல் நன்மையும் வழங்கிய பின்பு, ஆயர் அவர்கள் பண்டத்தரிப்பு தியான இல்லம் சென்று, அங்குள்ள மக்களை, இடங்களையெல்லாம், தரிசித்தபின் மீண்டு வரும் வழியில் மானிப்பாய் திருக்குடும்பக்கன்னியர் மடத்திலேதான் மேற்படி நிகழ்ச்சி இடம்பெற்றது.

எந்தவிதமான, சம்பிரதாய முறையான வரவேற்பு ஆரவாரங்கள் இன்றி குடும்ப உறவுடன் ஆயர், சகோதரிகள் சந்திப்பு இடம்பெற்றது.

''வீட்டுக்காறர்???''

''ஓம் வாறோம்.''

நாமே நம்முடைய ஆடுகளைத் தேடிப் போவோம்.

ஆயன் அன்பு தேடி வந்தது.

எசே. 34:11,)

தி. கு. சகோதரிகள்
மானிப்பாய்.

# புனித மாட்டீனார் குருமட புதிய அதிபர்



அருட்திரு. M. றெஜி ராஜேஸ்வரன் அடிகளார் யாழ். புனித மாட்டீனார் சிறிய குருமட அதிபராக யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா, பூனாவில் பாப்பிறை குருமடத்தில் இறையியல் கற்ற இவர், 1965ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பல பங்குகளில் மறைப் பணியாற்றிய இவர், றோமாபுரியில் உயர் கல்வி கற்றபின், இளவாலை மறைவட்டாரத்தின் முதல்வராகப்பணியாற்றினார். அண்மையில் நடந்த இராணுவ சுற்றிவளைப்பின் போது இரு மாதங்களாக இராணுவப் பிடியில் இவர் அகப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தேவநற்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயரவர்கள் பதிலளித்தபின், அங்குவந்திருந்த குருக்களுடன் கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். தமது மறையுரையில் ஆயரவர்கள் ''இன்றைய காலகட்டத்தில் எமக்கு ஆறுதலளிப்பதும் வழிகாட்டுவதும் தேவநற்கருணையே. இன்று எம்மிடையே நிலவும் சுயநலத்தை ஒழிக்கவும், பகைமை உணர்ச்சியைப்போக்கவும், தீய எண்ணங்களை அகற்றவும், அன்புசெய்யவும், தேவநற்கருணை நல்வழிகாட்டுகிறது'' என்றார்.

இடம் பெயர்ந்து வந்த சிறார்கள் எண்பதுபேர், ஆயரவர்களின் திருக்கரங்களால் முதல்நன்மைபெறும் பேறுபெற்றனர்.

மானிப்பாய் மறைவட்டார முதல்வர் அன்ரன் இராசநாயகம் அடிகளார் தமது நன்றியுரையில் இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு அடைக்கலமளித்து தங்கள் இல்லிடங்களிலும் காணிகளிலும் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் பல்வேறு வசதிகளையும் உதவிகளையும் அளித்துவரும் மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி மக்களை வெகுவாகப் பாராட்டினார்.

ஆயரவர்கள் திருப்பலியைத் தொர்டர்ந்து முதல்நன்மைச் சிறாருடனும் மக்களுடனும் சிறப்பாக இடம்பெயர்ந்து வந்திருப்போருடனும் உரையாடியபின், பங்குத்தந்தையர்களுடன் இடம்பெயர்ந்தோர் நிலைபற்றி கலந்துரையாடினார்.

# கருதினால் பிக்காச்சி காலமானார்

கடந்த ஞாயிறு 29.11.92 அன்று இந்தியாவின் கல்கத்தா மறைமாவட்ட இளைப்பாறிய பேராயரான மேன்மை தங்கிய கருதினால் லோறன்ஸ் பிக்காச்சி அவர்கள் தனது 76ஆவது வயதில்காலமானார். யேசு சபையைச் சேர்ந்த இவர் 1976ஆம் ஆண்டில் பாப்பரசர் 6ஆம் சின்னப்பரால் கருதினால் ஆக நியமிக்கப்பட்டார்.

அடுத்த இதழ்
கிறிஸ்மஸ்
சிறப்பு மலர்

# நீங்கா நினைவுகள்

*பிரான்சில் ''டி மசெனட் சர்வதேச நடுநிலையத்தில் குருமாணவ உருவாக்குனர் கருத்தரங்கில் கலந்து கொண்ட அருட்திரு ஜீவாபோல் அ.ம.தி. அடிகளாருடன் சில நிமிடங்கள்.}*

பேட்டி: அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

**பிரான்ஸ் நாட்டில் அண்மையில் தாங்கள் கலந்து கொண்ட கருத்தரங்கு பற்றி பாதுகாவலன் வாசகர்களுக்கு சற்று விபரிப்பீர்களா?**

அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனர் ''இயூஜின் டி மசெனட் ஆண்டகை கைக்கொண்ட ஆன்மீகத்தின் அடிப்படையில் குருமாணவர் உருவாக்கம்'' என்ற கருத்தரங்கில் உலகின் பல இடங்களில் இருந்து வருகை தந்த 15 அமல மரித்தியாகிகளுடன் இலங்கையில் இருந்து நான் கலந்து கொண்டேன். முதல் தடவையாக நடைபெற்ற இக் கருத்தரங்கு ''அமல மரித் தியாகிகளின் தொட்டில்'' என அழைக்கப்படும் ஏக்ஸ் நகரில் அவர் வாழ்ந்த இல்லமான தற்போதைய டி மசெனட் சர்வதேச நடுநிலையத்தில் ஆறு வாரம் நடைபெற்றது.

**அ.ம.தி.களின் உருவாக்கம் மறை வட்டக் குருமாணவர்களின் உருவாக்கத்தில் இருந்து வேறுபட்டதா?**

ஓர் அ.ம.தி குருமாணவன் மற்றைய குருமாணவர்களைப் போல ஒரு குருவாக வேண்டும் என்பதோடு அ.ம.தி.கள் கூட்டத்தில் ஓர் துறவியுமாக வேண்டும் என்பதில் வேறுபடுகிறார்.

**குறிப்பாக என்ன அம்சங்களில் அ. ம. தி. குரு மாணவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்ல முடியுமா?**

சிலுவையில் அறையுண்ட மீட்பரை மனக்கண்முன் கொண்டு கைவிடப்பட்ட (The Abandoned), தடுக்கப்பட்ட (The Oppresed), ஒதுக்கப்பட்ட (The Marginalized), மக்களில் விசேட அன்பு கொள்ளவும், உறவாடவும், கற்றுக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

**கருத்தரங்கில் ஏற்பட்ட உங்களைத் தொட்ட அனுபவம் ஏதும் உண்டா?**

எமது நிறுவுனரின் சொந்த மண்ணிற்குப்போய், நாம் இதுவரை கேட்டும், படித்தும் அறிந்த உண்மைகளையும், அவருடைய வாழ்வுடன் தொடர்புடைய முக்கிய இல்லங்களையும் ஆலயங்களையும், சுற்றுப்புறங்களையும் தரிசிப்பது உள்ளத்தை தொடும் ஒரு தனி அனுபவமாயிருந்தது.

பல நாடுகளில் இருந்து வருகை தந்த உறுப்பினர்களோடு இணைந்து வாழுதல் என்பது புதுமையானதாக இருந்தது.

**எமது மண்ணின் வேதனை மிக்க போர்க்கால நிகழ்வுகளின் மத்தியில் அமதிகள் அழைப்பிற்கு இளைஞர் செவிமடுப்பார்களா?**

எமது இன்றைய நிலையிலும் எமது இளம் உள்ளங்களில் வளரும் தியாக சிந்தையும், மன உறுதியும், எமது கிறிஸ்தவ குடும்பங்களில் ஊன்றி இருக்கும் இறையுணர்வும் எம் சபைக்கு மேலும் பல தியாகிகளை பிறப்பித்துக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் பேமஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81